பக்கங்கள்:-19

காலை முரசு

மாகாண சபைத் தேர்தல் நடந்தால்

## என்.பி.பி. அரசு தோல்வியடையும்

சஜித் அணி சொல்கின்றது

"இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் 03



முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 22 | ஞாயிற்றுக்கிழமை | 06.07.2025 | அதிர்வு 336





# பேரதிர்ச்சியை ஏற்படுத்தும் செம்மணி தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள்

## நேற்றும் 3 என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது மேலும் மூன்று என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 45 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 06



# செம்மணிப் புதைகுழியில் ட்ரம் மகஸின் ஒன்று மீட்பு!



(ந.லோகதயாளன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து ஆயுதங்கள் அல்லது வெடிப்பொருள்களைக் கொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் சிறிய பரல் ஒன்று குண்டு செயலிழக்கும் பிரவினரால் மீட்கப்பட்டுள்ளது. அது ஏ.கே. அல்லது எல்.எம்.ஜி.ரக இயந்திரத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ட்ரம் மகஸின் (ரவைக் கூடு) எனச் சம்பந்தப்பட்ட தரப்புகளால் அடையாளம் காணப்பட்டது என அறியவந்தது.

ஆயினும் அந்த ட்ரம் மகஸினுக்குள் ரவைகள் நிரப்பப்பட்டிருந்தனவா அல்லது அது வெற்று மகஸினா என்பது தெரியவரவில்லை.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் 06





செம்மணி மனிதப் புதைகுழி இதுவரை 10 நாள்களாக அகழப்பட்டுள்ளது. 45 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றன.

அதில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டு, நேற்று வெளியே எடுக்கப்பட்ட சிறிய தகர டப்பா போன்ற பொருள் முக்கிய திருப்பு முனையைத் தந்திருக்கின்றது.

அது ஏ.கே. அல்லது எல்.எம்.ஜி. ரக இயந்திரத் துப்பாக்கியின் ட்ரம் மகஸின் (ரவை கூடு) என்று அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அது உண்மை என்றால், இந்த மனித சடலங்கள் புதைக்கப்பட்ட சமயம், ஆயுதம் தாங்கிய ஒரு படைத்தரப்பின் பிரசன்னத்துடன்தான் அது இடம்பெற்றிருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்ற ஓர் அடையாளமாக கருத முடியும். அது மாத்திரமல்ல, இந்த ட்ரம் மகஸின் பாவிக்கப்படுகின்ற காலத்தைச் சேர்ந்த மனித புதைகுழி இது என்பது இதன் மூலம் உறுதியாகியிருக்கின்றது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு மத்தியில் 06












# வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் சம்பிரதாயபூர்வமாக நேற்று பதவியேற்றார்

வவுனியா வடக்கு பிரதேசசபையின் தவிசாளராக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்திருநாவுக்கரசுகிருஷ்ணவேணி சம்பிரதாயபூர்வமாக நேற்று பதவியேற்றார்.

உபதவிசாளராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விநாயகமூர்த்தி சஞ்சுதனும் பதவியேற்றிருந்தார்.

வவுனியா வடக்கு பிரதேசசபையின் கலாசார மண்டபத்தில் பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேசசபையின் செயலாளர் ஆகியோரின் பங்கேற்புடன் மேற்படி பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வவுனியா மாநகர மேயர் சுந்தரலிங்கம் காண்டீபன், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபையின் உபதவிசாளர் தே.சிவானந்தராசா, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் துளசி, நெல்சன், வெண்கதிர், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் செ.மயூரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் ந.கருணாநிதி, உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளருமான பாலச்சந்திரன் சிந்துஜன், வவுனியா மாநகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர்கள், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேசசபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# சண்முகதாசன் நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும் தமிழ்ச் சங்கத்தில்!


இலங்கை புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடி தலைவரான என்.சண்முகதாசனின் 105 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறுகிறது.


பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் "கொந்தளிப்பான சர்வதேச நிலைவரமும் இலங்கைக்கான மார்க்கமும்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன் நூல் அறிமுகவுரையை நிகழ்த்துவார். கம்யூனிஸ்ட் இயக்க செயற்பாட்டாளரான எம்.ஏ.சி. இக்பால் நூலை வெளியிட்டு வைப்பார்.

சண்முகதாசனின் நூற்றாண்டை முன்னிட்டு 2020 ஜூலையில் அரசியல் ஆய்வாளர்கள், இராஜதந்திரிகள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலான "சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்" (தமிழிலும் ஆங்கிலத்திலும்) வெளியிட்டு வைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வை மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது.




# யாழ்.பல்கலை சட்டத்துறை – சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுக்கும் 'நீதம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுக்கும் "நீதம்" சட்ட இதழின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக கைலாசாபதி கலையரங்கில் ஜூலை 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இதழ் வெளியீடு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் குமுதினி விக்கிரமசிங்கே பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் கௌரவ விருந்தினராகவும் பங்கேற்கவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலரும் இதன்போது பங்கேற்கவுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் நீதம் இதழ் வெளியிடப்பட்டு வருவதுடன் இம்முறை ஒன்பதாவது தடவையாக இது வெளியிடப்படவுள்ளது.

**என்.பி.பி. அரசு..**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியான தேசிய மக்கள் சக்தி தோல்வியடையும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"நாடாளுமன்றத் தேர்தலை விடவும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி அதிகரித்துள்ளது. ஏனைய எதிர்க்கட்சிகளின் வாக்கு வங்கியும் அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது.

அடுத்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனினும், தற்போதைய சூழ்நிலையில் அந்தத் தேர்தலை அரசு நடத்துமா எனத் தெரியவில்லை. அவ்வாறு நடத்தப்பட்டால் அனைத்து மாகாண சபைகளையும் எதிரணிகளே கைப்பற்றும்.

அதேவேளை, இந்த அரசு ஐந்து வருடங்கள் பயணிக்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது, மக்கள் ஆணைக்கு முரணாக அரசு செயற்பட்டால் போராட்டங்களில் ஈடுபட்டு, அரசின் ஆயுள் காலத்தைச் சுருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றார்.






# ஆனமடுவவில் நேற்று டிப்பரும் காரும் மோதிய விபத்தில் இரண்டுக்கும் சேதம்

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் – குருநாகல் பிரதான வீதியில் ஆனமடுவ பிரதேசத்தில் உள்ள கன்னங்கரா சிங்கள மகா வித்தியாலயத்துக்கருகில் நேற்று சனிக்கிழமை காரும் டிப்பரும் மோதிய விபத்தில் இரு வாகனங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. மோட்டார் கார் ஒன்று மற்றைய வாகனத்தை கடந்து செல்ல முற்பட்டபோது

பின் பக்கமாக வந்த டிப்பருடன் கார் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனசாரதிகளுக்குசாதாரணகாயங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.













# 2028 முதல் வெளிநாட்டுக்கடன்கள் மீளளிக்க வேண்டும் இன்னும் ட்ரம்புடன் வரி இணக்கப்பாட்டுக்கு வரவில்லை

2028 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் உள்ள எமது வெளிநாட்டுக் கடனை நாம் திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி டிரம்பின் வரிக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து இன்னும் தீர்வில்லை.

– எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு விசனத்துடன் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

கலாவெவ நன்னீர் மீன்பிடிக் கிராமத்தில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார். இங்கு இக்கிராம மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அங்கு எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறியவை வருமாறு:–

நமது நாட்டின் ஏற்றுமதியில் பெரும் பகுதி அமெரிக்கச் சந்தைக்கு அனுப்பப்படுகிறது. ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பரஸ்பர தீர்வை வரிகள் நமது நாட்டின் ஏற்றுமதிக்கு குறிப்பிடத்தக்க போட்டியை உருவாக்கியுள்ளன. இந்த வரிச் சிக்கலை எதிர்கொள்ள அமெரிக்காவின் பொருளாதாரம் குறித்து முடிவெடுப்பவர்களுடன் ஏனைய நாடுகளின் தலைவர்கள் கலந்துரையாடி தமக்குச் சாதகமான முறைகளில் இணக்கப்பாட்டை எட்டியிருக்கின்றனர். ஆனால் நமது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பொறுப்பானவர்கள், தொழில்துறை துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், இத்தகைய இணக்கப்பாடுகளை இதுவரையில் எட்டவில்லை.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியபோது, அரசாங்கம் தனது பிரதிநிதிகளை அனுப்பி கலந்துரையாடல்களை நடத்தும் என இந்த அரசாங்கம் வீராப்பு பேசியது. ஆனால் இன்றுவரை இந்தப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் இல்லை. நமது நாட்டின் ஏற்றுமதித் துறை அச்சுறுத்தலுக்கு ஆளாகிவரும் தருணத்தில், இந்த செயற்திறனற்ற அரசாங்கம் அமைதி காத்து வருகிறது. இந்த அரசாங்கத்தால் பதில்களையும் தீர்வுகளையும் வழங்க முடியாதுபோயுள்ளது.

ஒரு நாடாக, 2028 ஆம் ஆண்டுக்குள் நமது வெளிநாட்டுக் கடனை நாம் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. தற்போதைய அரசாங்கம் முந்தைய அரசாங்கத்தால் எட்டப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை எந்த திருத்தங்களையும் மேற்கொள்ளாது அதே முறையில் முன்னெடுத்து செல்கிறது. ஏற்றுமதியில் பிரச்சினைகள் காணப்படுகின்ற படியால், வெளிநாட்டுக் கடன்களை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்ற விடயத்தில் சிக்கல்கள் நிலவுகின்றன. கடனை திருப்பிச் செலுத்த பொருளாதார வளர்ச்சி விகிதம் 5 வீதமாக அமைந்து காணப்பட வேண்டும். இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் 3.5 வீதமாகவும், அடுத்த ஆண்டு 3.1 வீதமாகவும் இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2028 ஆம் ஆண்டுக்குள் கடனை திருப்பிச் செலுத்த 5 வீத விகிதத்தை எட்ட வேண்டும். என்றாலும், இந்த அரசாங்கம் ஏற்றுமதி துறைக்கு உரிய பெறுமானத்தை வழங்கவில்லை.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 200 ஆடைத் தொழிற்சாலைகள் மூலம் நாட்டிற்கு டொலர்களை ஈட்டித் தந்தார். தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக இன்று நமது நாட்டின் ஏற்றுமதிகள் வீழ்ச்சி கண்டு வருகின்றன. இன்னும் இந்த அரசாங்கத்தால் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் ஓர் உடன்பாட்டை எட்ட முடியாதுபோயுள்ளது.

நமது நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் வந்து வாக்குகளைப் பெற்றுக் கொண்டு, அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்னர் மக்களை மறந்து விடுகின்றனர். நான் இதனை மாற்றியமைத்துள்ளேன். மக்களின் பிரச்சினைகளுக்கு செவி சாய்க்காமை, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்காமை, மக்களின் கேள்விகளுக்குப் பதில்கள் இல்லாமை போன்ற காரணங்களால் நாட்டில் ஓர் இடைவெளி தோன்றியுள்ளது. இப்பிரதேச மக்களும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய அரசாங்கம் கூட இப்பிரச்சினைகள் குறித்து புரிந்து கொள்ளாப் போக்கில் இருந்து வருகின்றது.

இன்று, மக்கள் ஜீவிப்பது கடினமான ஒரு விடயமாக மாறியுள்ளது. மூன்று வேளை உணவுகளைக் கூட உரியவாறு பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு வந்துள்ளனர். நாளாந்த வாழ்க்கைச் செலவுகளை பூர்த்தி செய்து கொள்ளும் விடயத்தில் கடன் சுமையை பெரும்பாலானோர் எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பிட்ட வருமான மூலத்தை பலர் இழந்துள்ளனர். இதனால் பெரும்பாலானோர் கடனாளிகளாக மாறிவிட்டனர். தங்கள் சொத்துக்களை அடமானம் வைத்துள்ளனர்.

சுற்றுலா, விவசாயம் அல்லது மீன்பிடி என எத்துறைகளாக இருந்தாலும், இந்தத் தொழில்கள் மூலம் மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை இன்றைய பொருளாதார சூழ்நிலை உருவாக்கித் தராது. மக்களிடம் காணி உறுதிப் பத்திரங்களோ அல்லது காணிக்கான ஏனைய ஆவணங்களோ இல்லாதவர்களும் இருக்கின்றனர். வீட்டுக்கும், காணிக்கும் மூலதன மதிப்பு இல்லாமையினால் வளர்ச்சியும் தடைபடுகிறது. இம்மக்களின் காணி மற்றும் வீட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

வனவிலங்கு துறையுடன் தொடர்புடைய சுற்றுலாத் துறையை எம்மால் கட்டியெழுப்ப முடியும். ஆனால் அதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் எடுப்பதாக இல்லை.

இப்பிரதேச மக்களின் பிரச்சினைகளை பதிவு செய்து, நாடாளுமன்றத்தில் முன்வைத்து, தீர்வுகள் தேடப்படும். மேலும், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி என்ற வகையில் பெற்றுத் தரக் கூடிய தீர்வுகளைப் பெற்றுத் தர நாம் நடவடிக்கை எடுப்போம். – என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து வெடிப்பொருள்களோ சன்னங்களோ, ரவைகளோ, ரவைக் கூடுகளோ வெளிப்பட்டனவாகத் தெரியாத இந்தச் சூழலில், இந்த ட்ரம் மகஸின் வெளிப்பட்டமை ஒரு முக்கிய திருப்புமுனை என்று கருதலாம்.

* * *

நேற்று நான் இப்பத்தியில் குறிப்பிட்டமை போல கடந்த சில தினங்களாக, என் பெயர் குறிப்பிட்டு, இலக்கு வைத்துத் தாக்குதல்கள் சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. பல மூல பிரச்சாரங்கள் அநாமேதய அல்லது தங்களை அடையாளப்படுத்தாத முகப்புத்தகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக வருகின்றன. வேறு சில கொச்சைப்படுத்தப்பட்டனவாக இருக்கின்றன.

அவற்றில் ஒன்று "யாழ்ப்பாணத்தில் செயல்பட்ட புலிகள் இயக்கத்துக்கு உதவியவர்களே இலக்கு வைக்கப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டதாக பத்திரிகையாளர் திரு.வித்தியாதரன் சொல்லி இருக்கின்றார்" என்று தொடங்கி என்னுடைய கருத்தை தவறான அர்த்தத்தோடு out of context இல் வியாக்கியானப்படுத்த, அதன் மேல் தொடர்ந்து அவதூறுகள் கட்டவிழ்த்துவிட்டு விடப்படுகின்றன.

youtube ஊடகவியலாளர் ஒருவருக்கு நான் வழங்கிய செம்மணிப் புதைகுழி தொடர்பான செவ்வியை ஒட்டியே இந்த விளக்கங்கள், வியாக்கியானங்கள் எல்லாம் பறக்கின்றன. அந்த செவ்வியின் இணைப்பைக் கொடுத்துள்ளேன்.




என்னுடைய பேட்டியில் பின்புலத்தையும் அதன் உட்கருத்தையும் புரிந்து கொள்ளாமல் வேண்டுமென்றே ஓர் அர்த்தப்படுத்தலுடன் இந்த விடயங்கள் பரப்பப்படுவதை பார்க்கின்றேன்.

நான் இப்படித்தான் கூறியிருந்தேன்:-

"(படைத்தரப்பை பொறுத்தவரை) அவர்களுக்கு ஒரு பிரச்சனை இருந்தது. அவர்கள் கைப்பற்றிய பகுதிகளில் புலிகள் ஆங்காங்கே இருந்து செயல்படுகிறார்கள். கரந்தடிபடைகளாகத் தாக்குதல் நடத்துகிறார்கள். அந்தத் தாக்குதலை நடத்துவதற்கு அவர்களுக்கு வசதியாக, வாய்ப்பாக, சாப்பாடு கொடுத்து, தங்கமிடம் கொடுத்து, பாதுகாக்கின்றவர்களே இலக்கு வைக்க தொடங்கினார்கள். அப்படி இலக்கு வைக்கப்பட்டவர்களே இப்படி நானூறு, ஐந்நூறு என நூற்றுக் கணக்கில் காணாமல் ஆக்கப்பட்டு போனவர்கள்."

– இப்படி நான் கூறியது உண்மை தான். ஆனால் அந்தப் பின்புலமும் அதனால் கூற விழைந்த விடயமும் விளங்காதவர்கள் போல இந்த வியாக்கியானங்கள் வந்திருக்கின்றன.

அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வசித்தவர்களுக்கு இந்த சூழ்நிலை தெரியும். புலிகளுக்கு உதவுவர்களைக் காணாமல் ஆக்குவோம் என்ற செய்தியை சொல்வதற்காக, புலிகளுக்கு உதவினார்கள் எனத் தாங்கள் சந்தேகப்பட்ட எல்லோரையுமே அல்லது யாரேனும் அப்படி தகவல், செய்திகள், துப்புக் கொடுத்திருந்தால், அப்படி யாரைக் குறிப்பிட்டுக் கொடுக்கப்பட்டதோ அவர்களை எல்லாம் அள்ளிச் சென்றார்கள்.

புலிகளுக்கு உதவபவர்களுக்கு இது தான் கதி என்று – உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் அப்போது வராவிட்டாலும் – எழுதப்படாத ஒரு மனோரீதியான அச்சுறுத்தல் பாணியில் விடயங்கள் கட்டவிழ்ந்தன அப்போது.

யாராவது புலிகளுக்கு உதவ – அவர்கள் மறைந்து செயல்பட வாய்ப்பளிக்க – முயன்றால் அல்லது அது பற்றிய தகவல்கள் தெரிந்திருந்தும் தங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால், இத்தகைய கதி ஏற்படும் என்பதை யாழ் மக்களுக்கு செயலால் உணர்த்தும் விடயங்களாக இந்த காணாமல் போன விவகாரம் அப்போது அமைந்தது. அப்போது வடக்கில் அந்த அச்சுறுத்தல் இக்கட்டுக்குள் வசித்தவர்களுக்கு இந்தப் பயங்கரம் நன்கு தெரியும்.

புல்களுக்கு உதவியவர்கள், அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பவர்கள், அவர்கள் மறைந்திருந்துப்பதற்கு இடம் அளிப்பவர்கள், அது பற்றிய தகவல் தெரிந்தும் தங்களுக்குத் தகவல் தராதவர்கள் என்று தாங்கள் கருதிய எல்லோரையுமே அவர்கள் அள்ளிச் சென்றார்கள். அது அப்போது நடைபெற்ற விடயம் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நடவடிக்கை மூலம் மக்களை ஓர் அச்சுறுத்தல் மனோ நிலையில் அடக்கி வைத்திருக்கவும், புலிகளுக்கு உதவாமல் இருக்கும் நிலையை உறுதிப்படுத்தலாம் என்று கருதியும் அப்படி அவர்கள் செயற்பட்டார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அந்தக் கருத்தியலில் நான் முன்வைத்த விடயத்தை, ஏதோ புலிகளுக்கு உதவியவர்களை சரியாக அடையாளம் கண்டு இராணுவம் அவர்கள் மீது மட்டும்தான் நடவடிக்கை எடுத்தது, அப்படி நீதியாக நடந்து கொண்டது என்ற மாதிரி நான் கருத்து சொன்னதாக சில பிரகிருதிகள் முதலில் அர்த்தப்படுத்த, அதே அர்த்தத்தில் பலரும் என் மீது பாய்கின்றனர். காய்கின்றனர்.

அதன் உச்சத்துக்குப் போய், புலிகள் என்னை சமூக விரோதியாகக் கருதிக் கொல்ல வேண்டும் என்றார்கள், அல்லது கொல்வதற்கு முடிவு கூட செய்து இருந்தார்கள் என்ற அளவுக்கு புலனாய்வு(?) செய்தி அறிக்கை வெளியிடுகின்ற அறிவிப்புகள் கூட இப்போது சமூக ஊடகத்தில் பரபரப்பாக வெளிவந்திருக்கின்றன. வாசிக்கவும் கேட்கவும் சிரிப்பாக இருந்தது.

என் வாசகர்களுக்கு ஒரு தகவலை சொல்லி விடயத்தை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் – 2009 பிப்ரவரி இறுதிப் பகுதியில் கொழும்பில் வெள்ளை வானில் நான் கடத்தப்பட்டேன். அதற்கு முதல் நாள் ஓர் ஆஸ்திரேலியா பத்திரிகையாளர் என்னுடைய 'சுடர்ஒளி' ஆசிரியர் பீட அலுவலகத்தில் என்னைப் பேட்டி கண்டார். என் பேட்டியை முடித்துக் கொண்டு, அடுத்த நாள் காலையில் அவர் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைச் செவ்வி காணச் சென்ற சமயம், கொழும்பில் நான் வெள்ளை வானில் கடத்தப்பட்டமை பற்றிய செய்தி அவருக்குக் கிடைத்தது. அவர் கோட்டாவிடம் அது குறித்து கேள்வி எழுப்பிய போது, கோட்டா என்னைப் பயங்கரவாதி என்று சத்தமிட்டு கோபத்துடன் திட்டுவது பற்றிய அந்த செய்தியின் காணொலி இணைப்பை இத்துடன் தந்துள்ளேன். அதை வாசகர்கள் பார்க்கலாம். ஆங்கிலத்தில் விடயங்கள் பேசப்பட்டாலும், அடிக்குறிப்பில் என்ன பேசப்பட்டது என்பது தமிழில் உள்ளது. அதனனை வாசிப்பதன் மூலம் வாசகர்கள் உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

அதாவது யுத்தம் முடிவடைவதற்கு இரண்டரை மாதங்களுக்கு முன்னர் நான் வெள்ளை வானில் கடத்தப்பட்டு, யுத்தம் முடிவடையும் காலம் வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். யுத்தம் முடியும் சமயத்தில்தான் விடுவிக்கப்பட்டேன்.




அந்தக் காலகட்டத்தில் கோட்டாபய ராஜபக்ஷவினால் பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுகின்ற புலிகளோடு இன்னொரு பயங்கரவாதியாகச் செயல்படுகின்ற ஒருவனாக நான் அடையாளப்படுத்தப்பட்டேன். அப்படிப்பட்ட ஒருவரைத்தான் புலிகள் தங்களின் கொலைப் பட்டியலில் வைத்திருந்தார்கள் என்று இப்போது புதிதாக பிறந்திருக்கும் 'புலனாய்வுப் பிரகிருதிகள்'(?) தங்களை அடையாளப்படுத்தாமல் – வெளிப்படுத்தாமல் – வெளுத்து வாங்குகிறார்கள்.

கணிசமான வாசகர்கள் அவர்களைப் பற்றி அறிந்திருந்தாலும், இத்தகைய குழப்பவாதிகளை அம்பலப்படுத்த வேண்டி இருப்பதால் அதனைக் குறிப்பிட்டேன்.

---

## பேரதிர்ச்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் பத்தாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது மூன்று என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 45 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 42 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான வி.கே. நிரஞ்சன், ஞா.ரனித்தா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர்.

மேலும் நேற்றைய அகழ்வுப்பணிகளின்போது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் தொல்லியல் துறை விரிவுரையாளர்கள் வருகை தந்து அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்களை அவதானித்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

---

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் ஒன்பதாம் நாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலையில் புதைகுழியில் இருந்து சந்தேகத்துக்கிடமான பொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை குண்டு செயலிழக்கும் பிரிவினர் வருகை தந்து அந்தச் சந்தேகத்துக்கிடமான பொருளை அகழ்ந்தெடுத்தனர். பின்னர் அது நீதிமன்றக் கட்டுக் காவலில் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

ஆய்வின் பிற்பாடு அது தொடர்பான தகவல்கள் உறுதிப்பாடாக வெளிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.




# 1,756 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வடக்கில் மிக விரைவில் நியமனம்

## போட்டிப் பரீட்சையின் போது மாவட்ட ரீதியில் வெட்டுப் புள்ளிகளை வழங்குவதற்கு யோசனை

**(கி.வசந்தன்)**

புதிய சுற்று நிருபத்தில் 1,756 பட்டதாரி ஆசிரியர்கள் வடக்கு மாணத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். அவர்களுக்கான போட்டிப் பரீட்சையின் போது மாவட்ட ரீதியில் தேவைக்கு ஏற்ப வெட்டுப் புள்ளிகளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வாரம் உலக வங்கி பிரதிநிதிகளுடன் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் எங்களது அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஒரு பில்லியன் டொலர் நிதி உதவி வடக்கு – கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்க இணங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இதனூடாக வடக்கு – கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற மக்களது பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது, கிராமிய பொருளாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் போன்ற செயற்பாடுகளை செய்ய இருக்கின்றோம்.

அது மட்டுமல்லாது வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நீண்ட காலமாக குளங்கள் புனரமைக்கப்படாமலும், தூர் வாராமலும், பழுதடைந்தும் காணப்படுகின்றன. இதனை திருத்தியமைக்க வேண்டிய நிலைப்பாடு உள்ளது. விசேடமாக இந்த நிதியத்தின் மூலம் இதைச் செய்து தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரை பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகன்றது. விவசாயத்திலும் நெற்பயிர்ச்செய்கை பிரதான இடத்தைப் பெறுகின்றது. சிறுபோக நெற் செய்கைக்கு மக்கள் அவதிப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளும் நிலத்தின் அளவு குறைவாகவுள்ளது. அதற்கு குளத்து நீர் போதாமை காரணமாகும். குளங்கள் புனரமைப்பு செய்வதன் மூலம் சிறுபோக நெற் செய்கையை அதிகரிக்க முடியும். விவசாயிகள் பொருளாதாரத்தில் மட்டுமன்றி எமது பிரதேச அரிசி தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். கிராமிய வீதிகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது தவிர, கல்வியில் இடமாற்றங்கள் பூதாகரப் பிரச்சினையாகவுள்ளது. வடமாகாணத்தில் இடம்பெற்ற வலயங்களுக்கு இடையிலான இடமாற்றத்தில் மடு, வவுனியா வடக்கு, மன்னார், துணுக்காய் போன்ற வலயங்களில் இருந்து செல்ல வேணடிய ஆசிரியர்களில் 99 வீதமானவர்கள் இடமாற்றத்தை ஏற்று விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அதேவேளை, அந்த வலயங்களுக்கு வரவேண்டிய ஆசிரியர்கள் முழுமையாக வருகை தரவில்லை. மடு வலயத்தில் 29 ஆசிரியர்கள் வேறு வலயங்களுக்கு இடமாற்றமாகி சென்றுள்ளார்கள். 4 ஆசிரியர்கள் மட்டுமே வந்துள்ளார்கள். இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வறிய நிலையில் உள்ள மாணவர்களின் கல்வி மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது மாகாண கல்வித் திணைக்களம் கரிசனையோடு கவனம் செலுத்தி மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாது இடமாற்றம் சிலவற்றில பிழைகள் இருக்கின்றன. தெரிவுகளில் தவறுகள் உள்ளன. எதிர்வரும் காலத்தில் துல்லியமான தகவல்களைப் பெற்று ஆசிரியர்களுக்கு அநீதி இடம்பெறாத வகையில் இடமாற்றம் வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் 3,517 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. அரசாங்கத்தின் சுற்று நிருபம் மூலம் பட்டதாரி ஆசிரியர்களை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த சுற்று நிருபத்தில் பல பிழைகள் உள்ளன. அதில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதனால் பட்டதாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அந்தச் சுற்று நிருபம் நிறுத்தப்பட்டுளது. புதிய சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. புதிய சுற்று நிருபத்தில் 1,756 ஆசிரியர்கள் வடக்கு மாணத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். பற்றாக்குறையில் 50 வீதம் உள்வாங்கப்படவுள்ளார்கள். இதன் மூலம் கணிசமான ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க முடியும். ஆனாலும் அதில் ஒரு தடை உள்ளது. ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கையும் விரைவாக முடித்து இந்த வருடத்திற்குள் ஆசிரிய நியமனத்தை வழங்க எண்ணியுள்ளோம். பொதுவான வெட்டுப் புள்ளியை நிறுத்தி மாவட்டத்திற்கு தனித் தனியான வெட்டுப் புள்ளிகளை வழங்கி மாவட்டத்திற்கு தேவையான ஆசிரியர்களை உள்வாங்குவதன் மூலம் இடமாற்றப் பிரச்சினையையும் தீர்க்க முடியும். இது தொடர்பில் ஆளுநருடன் பேசியுள்ளோம்.

எம்மைப் பொறுத்தவரை வடக்கு மாகாணம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. எமது காலத்தில் அதனை ஏனைய மாகாணங்களை போல முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். அதை நோக்கி எமது பயணம் இருக்கிறது. எமக்குக் கட்சி பேதம் கிடையாது. உள்ளூராட்சி மன்றங்களில பல்வேறு கட்சிகள் ஆடசி அமைத்துள்ளன. அவை எம்மோடு இணைந்து பணியாற்றினால் வடக்கு மாகாணத்தை கட்டியெழுப்ப முடியும். அரசியலுக்கு அப்பால் நாம் செயற்படத் தயாராகவுள்ளோம். அதற்கு அவர்களது ஒத்துழைப்பையும் கேட்டு நிற்கின்றோம். – என்றார்.



# கந்தானை, ஜா-எல, வத்தளை, ராகம பிரதேசங்களில் விசேட சோதனை; 300 க்கும் அதிகமானோர் கைது!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(உடப்பு க.மகாதேவன்)

கந்தானை, ஜா-எல, வத்தளை மற்றும் ராகம பகுதிகளில் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 300இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அறிக்கை ஒன்றை வெளியிட்டு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினன் இரவு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட இந்த விசேட சோதனை நடவடிக்கையை பொலிஸ், விசேட அதிரடிப்படை, இராணுவம் மற்றும் கடற்படை ஆகியன இணைந்து மேற்கொண்டிருந்தன.

நாட்டிலிருந்து போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் செயல்முறையின் மற்றுமொரு அத்தியாயமாக இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரிவினரின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆதரவை வழங்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான விசேட சோதனை நடவடிக்கைகளை நாடு முழுவதும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கற்பிட்டியில் ஸ்ரீமுத்துமாரியம்மன் சங்காபிஷேகம்



(உடப்பு க.மகாதேவன்)

கற்பிட்டி ஆனைவாசல் அருள்மிகு ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலய வருஷாபிஷேகத்தை ஒட்டிய சங்காபிஷேகம் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதன் போது,பக்த அடியார்களினால் பால்குடபவனி ஆலயத்தைச் சுற்றி வந்து அம்மனுக்கு பாலாபிஷேகம் இடம்பெற்றது.

ஆலய கிரியைகளை கிரியா தத்துவநிதி சிவஸ்ரீ ஸ்கந்த வரதேஷ்வரக் குருக்கள், சிவஸ்ரீ இ.ரா.முரளிதரன் சர்மா ஆகியோர் கலந்து கொண்டு நடத்தி வைத்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நியாயமான ஆதங்கம்

செம்மணப் புதைகுழி சாட்சியங்களைச் சிதைத்து, அவை அழிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மனித உரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர் எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சிரத்தையை வெளிப்படுத்தும் செய்தி தமிழர் தரப்பில் ஓர் அரசியல் தலைவரிடம் இருந்து வந்துள்ளது என்பதிலும் பார்க்க, இத்தகைய விடயங்களை சட்டரீதியாகக் கையாண்ட துறைசார் நிபுணராக மதிக்கப்படக்கூடிய, உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் ஒருவரிடம் இருந்து வந்திருக்கின்றது என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

ஏற்கனவே கால் நூற்றாண்டுக்கு முன்னர் இதே செம்மணிப் பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட 15இற்கும் மேற்பட்ட சடலங்களின் எச்சங்கள், சிதிலங்கள் இப்போது எங்கே இருக்கின்றன, சட்ட ரீதியான விசாரணைக்கும் விஞ்ஞான ரீதியான புலனாய்வுக்கும் இடம் அளிக்கும் விதத்தில் அவை முழுமையாக - உருப்படியாக - பேணப்பட்டுள்ளனவா என்பன போன்றவை தொடர்பில் சந்தேகம் நிலவும் சூழலிலேயே இந்த எச்சரிக்கை விடயத்தை முன் வைத்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

"மனித உரிமை ஆர்வலர்கள் இவ்விவகாரத்தில் சாட்சியங்களை சிதைத்து, இந்த எலும்புக்கூடுகள் அழிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கவலை தெரிவித்துள்ளனர். எனவே, அகழ்வாராய்ச்சியிலிருந்து ஆய்வகம் வரை எச்சங்களை யார் கையாண்டார்கள் என்பதற்கான தெளிவான ஆவணங்கள் அவசியம் என்பதால், காவல் சங்கிலியில் உடனடியாக கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம். இல்லையெனில், தடயவியல் முடிவுகள் சட்டப்பூர்வமாகப் பலவீனமடையும்." - என்று அவர் எச்சரித்திருக்கின்றார்.

தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை சர்வதேச மேற்பார்வையின் கீழ் பாதுகாக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும். இலங்கை அரசு அல்ல, சுயாதீன தடயவியல் குழுக்கள் அல்லது சர்வதேச நிபுணர்கள் ஆதார சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வைக் கையாள வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார்.

ஐ.நா.வின் செயலற்ற தன்மையின் காரணமாக,இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. இன்று, இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம், கல்லறைத் தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களும் முறையாக சேகரிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இலங்கை தொடர்பான 46/1 இலக்கத் தீர்மானத்தின் ஆணைக்குள் அவை பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இலங்கைச் சட்டங்களின்படி, இலங்கை நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுநடவடிக்கைஇப்போது முன்னெடுக்கப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் நீதியரசர் விக்னேஸ்வரனின் கோரிக்கை அந்தச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றப்படக்கூடியதா, சாத்தியமானதா என்பவை சர்ச்சைக்குரியவைதான். ஆனால் இலங்கையில் இதுவரை காலமும் நீதித்துறை தொடர்பாக இடம்பெற்று வரும் விடயங்களை நோக்குகின்ற போது, நீதியரசர் விக்னேஸ்வரனின் கோரிக்கை தார்மீக அடிப்படையில் முற்றிலும் நியாயமான - நீதியான - நீண்ட அனுபவத்தின் வெளிப்பாடாக அமைந்த - ஒன்று என்பது தெளிவானது.




# தனங்கிளப்பு பகுதியில் அமையக் கூடிய உப்பளத்தால் நிலத்தடி நீருக்கு ஆபத்து

## சாவகச்சேரி நகரசபை முந்நாள், இந்நாள் உபதவிசாளர்கள் அச்சம்

(த.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்கு உட்பட்ட தனங்கிளப்பு அறுகு வெளி பகுதியில் மீண்டும் உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அது தென்மராட்சிப் பிரதேசத்தின் நிலத்தடி நீரை பாதிக்கக்கூடும் என சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் கிஷோர் மற்றும் சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் மயூரன் ஆகியோர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:–

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தனங்கிளப்பு – அறுகுவெளிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருந்த உப்பளம் மீண்டும் திடீரென இயங்கு நிலைக்கு வந்துள்ளது.

இந்நிலையில் இந்த உப்பளத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அறிந்த சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோர் ஆகியோர் உப்பளத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்திருந்தனர்.

இதன்போது ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் உப்பு உற்பத்தி பாத்திகளுக்கு நீர் இறைப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சுமார் 5 குழாய் கிணறுகளில் நீர் எடுக்கப்பட்டு வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு உப்பளம் அமைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியும் பெறப்படவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

அறுகுவெளி கடல் நீரேரியில் இருந்தே உப்பு உற்பத்திக்கான நீர் எடுக்க வேண்டிய நிலையில் அதற்கான ஏற்பாடுகள் எதனையும் செய்யாமல் சட்டவிரோத குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் தென்மராட்சியின் நிலத்தடி நீர் வளம் பாதிக்கக்கூடிய அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளதால் உரிய அதிகாரிகள் இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு உபதவிசாளர் ஞா.கிஷோர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.










# தங்கத்துரை நினைவு தினம் கிளிவெட்டியில் அனுஷ்டிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ.தங்கத்துரையின் 28 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று சனிக் கிழமை காலை 9.00 மணியளவில் கிளிவெட்டியில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

அஞ்சலி நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் கலந்து சிறப்பித் தமை குறிப்பிடத்தக்கது.











# சுவாமி ஜீவனானந்தர் பாலர் விளையாட்டரங்கு நேற்று மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது

(வி.ரி சகாதேவராஜா)

மட்டக்களப்பு விவேகானந்தபுரம் ராமகிருஷ்ண மிஷன் சுவாமி விவேகானந்தர் பாலர் பாடசாலையில் சுவாமி ஜீவானந்தர் ஞாபகார்த்த பாலர் விளையாட்டரங்கு நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்சராத்மானந்தா ஜீ மகராஜ் அதனைத் திறந்து வைத்தார் .

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜி மகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ சுவாமி உமாதீசானந்தா ஜீ ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களும் இதில் கலந்து கொண்டார்கள்.









# அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் இன்று காலை மட்டக்களப்பில்

(வி.ரி .சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷினின் மட்டக்களப்பு அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் திருக்கோவிலின் புனராவர்த்தன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை. காலை 5.30 மணிக்கு நடைபெற உள்ளது.

40 வருடங்களின் பின் நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தில் இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்சராத்மானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பிப்பார்.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜி மகராஜ் தலைமையில் நடைபெறவுள்ள கும்பாபிஷேக நிகழ்வில் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ, சுவாமி உமாதீசானந்தா ஜீ ஆகியோருடன் மிஷன் அபிமானிகள் கலந்து சிறப்பிப்பார்கள்.

அன்னை சாரதா தேவியார் திருக்கோயில் 1982 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1985 ஜுன் மாதத்தில் முதலாவது கும்பாபிஷேகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# செம்மணிப் புதைகுழியும் அறமற்ற நீதியும்!



வி.எஸ்.சிவகரன்

கடந்த ஏழு தசாப்தமாக இலங்கையிலே இனத்துவ சம நீதி என்பது குதிரைக் கொம்பாகவே காணப்படுகிறது.

இனத்துவ, மொழித்துவ வகைப்படுத்தல் ஆரம்பித்து, கல்வித் தரப்படுத்தலில் பூதாகரமாகி, சிங்களவர்களுக்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு இன்னொரு நீதி என இருநிலை பார்வையில் அரச இயந்திரத்தை ஏவி விட்டு, ஆட்சியாளர்கள் சிங்கள மக்களை தம் இஷ்டப்படி இனவாதத்தை புகுத்தி, வகுப்புவாத சிந்தனையை ஊட்டி, மேட்டிமைவாத கருத்தியலை புகுத்தி, அடக்கி ஆளும் மனோ நிலையை உருவாக்கி, அதன் ஊடாக அரசியல் இருப்பை தமதாக்கிக் கொள்ளக்கூடிய யுக்தியை அரசியல் கட்சிகள் தெற்கில் தோற்றுவித்தன.

சகல வழிகளிலும் அடிப்படை உரிமை தொடக்கம் வாழ்வியல் இருப்புக்கான அத்தனை அம்சங்களும் நசுக்கப்பட்டதன் எதிரொலியே தமிழ் இளைஞர்கள் சினம் கொண்டு வன்முறையை நோக்கி நகர வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

இலங்கை அரசாங்கம் பல வழிகளில் அவர்களுக்கு புரிய வைக்க முனைந்தும், தமிழர்கள் எண்ணிக்கை ரீதியாக சிறுபான்மையினர், தாம் எண்ணிக்கை ரீதியாக அதிகம் என்றவுடன் பெரும்பான்மையினர் எனும் வகுப்புவாத மேலாதிக்க சிந்தனையில் தம்மை புடமிட்டுக் கொண்டனர்.

30 ஆண்டுகள் ஜனநாயக ரீதியாக பல்வேறு விதமான சாத்வீகப் போராட்டங்கள் நசுக்கப்பட்டதன் எதிரொலி அடுத்த 30 ஆண்டுகள் ஆயுத ரீதியான போராட்டம். இரண்டும் தொடக்கத்தின் நோக்கம் எதுவும் இன்றி சர்வதேச சதி வலையாலும் இந்தியாவின் வழித்துணையுடன் முள்ளிவாய்க்காலில் நசுக்கப்பட்டன.

ஆனால் இன்னும் தமிழர்களின் வாழ்வுரிமை நோக்கம் இருப்புரிமைக்கான நீதி – தடம் மாறாத தாகம் – அணைந்து விடாமல் நொதியமாகவே இருக்கின்றது.

யுத்தம் முடிவற்று 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் கூட இலங்கையர்கள் என்கின்ற கோட்பாட்டிலாவது வடக்கு, கிழக்கில் இருக்கின்ற தமிழர்களுக்கு சுயாதீனமான வாழ்வியல் உரிமையை வழங்குவதற்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த எவரும் விரும்பவில்லை. கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீது சவாரி செய்தே வருகிறார்கள்.

அரசோடு ஒத்திசைந்து போகக்கூடிய மனோ நிலையில் தமிழ் கட்சிகளும் அங்கும் இங்குமாக அல்லாடுகின்ற நிலைமையும் ஏற்பட்டுவிட்டது.

மக்கள் மத்தியிலும் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து, தமிழ்த் தேசியக் கோட்பாட்டு ரீதியான சித்தாந்தத்தின் மீது அதை வழிநடத்துவர்கள் மீதும் ஐயங்கள் ஏற்பட்டு, திசை மாறிப் போகின்ற நிலைமை உருவாகி, திசைகாட்டிக்கு வாக்கு போடுபவர்களாக மக்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்டுள்ளனர்.

மக்களின் பெருவிருப்புக்குரிய தமிழ்த் தேசிய உணர்வுடைய கட்சிகள் சுருங்கியும், பிளவு ஏற்பட்டும், சின்னா பின்னம் ஆகிவிட்டன. இதை தென் இலங்கை ரசித்து காய் நகர்த்தி வருகிறது.

தமிழர் தரப்புக்கு இருக்கின்ற உத் கட்சிப் பிளவுகளும், முரண்பாடுகளும், புலம்பெயர்ந்த தேசத்தவர்களின் தலையீடுகளும் தமிழ் தேசியக் கட்சிகளை மேலும் பலவீனப்படுத்துகின்ற காரணிகளாகவே அமைகின்றன.

சாதாரணமாக உள்ளூர் பிரச்சுனைக்கே வடக்கு. கிழக்கிலே இருக்கின்ற பொலிஸ் நிலையங்களில் கூட தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொள்ள முடியாது.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அரசியல் ரீதியாக நீதி கிடைக்கும் என எப்படி நம்புவது?

2009 க்கு பின்னர் எத்தனை புதைகுழிகள் அகழ்வு செய்யப்படுகின்றன? இதில் ஏதாவது ஒன்றுக்கு நீதி கிடைத்திருக்கிறதா? வடக்கு, கிழக்கு எங்கும் புதை குழிகள் அதிகமாக காணப்படலாம். யுத்த காலத்தில் கொல்லப்பட்டவர்கள் எல்லாம் புலிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டனர். இப்பொழுது புதை குழிகளையும் புலிகள் கணக்கில் போட்டு அரசு பெருக்கிக் கொள்ள முனையும். சிங்களக் கடும்போக்கு வாதிகளும் அதனையே நிரல் படுத்துவார்கள்.

நூற்றுக்கும் மேற்பட்ட உடலங்கள் தோண்டி எடுக்கப்பட்ட திருக்கேதீஸ்வரம் புதைகுழி நீதிமன்ற கோவைகளில் உறங்குகின்றது. மன்னார் சதோசா புதைக்குழி அப்படியே இழுபடுகிறது. கொக்குத்தொடுவாய் புதைகுழியும் இதே நிலையே. இதைவிட ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்ட புதை குழிகளின்

தொடர்ச்சி▼



# செம்மணிப் புதைகுழியும் அறமற்ற நீதியும்!

தொடர்ச்சி▲

நிலைப்பாடும் மௌனமாகியுள்ளன. செம்மணிப் புதைக்குழியும் இந்த வரிசையில் தன்னையும் இணைத்துக் கொள்ளும். நீதி இல்லாத நாட்டில், அறமில்லாத ஆட்சியாளர்கள் மத்தியில் எப்படி உண்மையையும் நீதியையும் நிலை நாட்ட முடியும்?

யாழ்ப்பாணத்தில் செம்மணி இருப்பதனால் ஊடக வெளிச்சம் அதிகமாக காணப்படுகிறது. அந்த ஊடக வெளிச்சத்தால் நீதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய நிலை இருக்குமா என்பது கேள்விக் குறியே. ஊடகங்கள் பக்கங்களை நிரப்புவதற்கு வேண்டுமானால் இந்த புதைகுழி விவகாரம் பூதாகரமாக்கப்படலாம். ஆனால் நீதியில்லாத இந்த உலகத்திடம் அரசற்ற தரப்பாக இருக்கக்கூடிய வலுவிழந்து போன தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுப்பது யார்? அறத்தின் பக்கம் நிற்பதற்கும் சத்தியத்தின் பக்கம் வார்த்தைகளை உரைப்பதற்கும் நீதியோடு போராடக் கூடிய வல்லான்மையுடையவர்களும் தமிழர் தரப்பில் மிகவும் குறைந்துவிட்டனர். அவ்வாறு போராடுபவர்களையும் எவர்களும் கண்டு கொள்வதாக இல்லை. ஏனையவர்களுக்கும் துரோகி பட்டங்கள் வழங்கி அவர்களையும் அமைதிப்படுத்தி விட்டனர்.

அடுத்து என்ன? இந்தக் கேள்விக்கு யாரிடமாது பதில் இருக்கிறதா?

செம்மணியில் கிடைக்கப்பெற்ற எலும்புக் கூடுகளை ஆய்வுக்காக அனுப்புகிறேன் என அரசாங்கம் கூறினாலும் இந்த ஆய்வுகளால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய இராணுவத்தினுடைய வேலைதான். துணை இராணுவக் குழுவாக இயங்கிய ஒட்டுக் குழுக்களும் இவ்விதமாக பலரை, பலவாறு கடத்திக் கொலையும் செய்தனர். காணாமல் போகவும் செய்தனர். இதை நிறுவுவது எப்படி? இதை நிறுவினாலும் அக்காலத்தில் சம்பவங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் பலர் ஓய்வு பெற்றுவிட்டனர். இன்னும் சிலர் இறந்தும் போயிருக்கலாம். சாதாரண உள்ளூர் அரசியலற்ற சம்பவங்களுக்கே நீதி இல்லாத இந்த அரசாங்கத்தில் 30 ஆண்டுகளுக்கு முற்பட்ட சம்பவத்திற்கு நீதி கிடைக்கும், அதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றெல்லாம் நம்புவது மிகச் சிறந்த நகைச்சுவை. இந்த எலும்புக்கூடுகளுக்கு எல்லாம் புதிய கற்பிதங்கள் உருவாக்கப்பட்டு, காணாமல் போகக்கூடிய நிலை தோன்றும், அரசாங்கம் ஒருபோதும் விசுவாசமாகவும், உண்மையைக் கண்டறியும் நோக்கிலும், நீதியை நிலை நாட்ட வேண்டும் எனும் அர்ப்பணிப்பிலும் எந்த விசாரணையை முன்னெடுக்கப் போவதில்லை.

அவ்வாறு முன்னெடுப்பின் பல இராணுவ அதிகாரிகளை சிறைக்கு அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படும். அவ்விதமான ஒன்றை அரசு ஒருபோதும் விரும்பாது.

இதற்கான நீதியை உலகத்திடமும் ஒருபோதும் பெற முடியாது. ஈரானிலும், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், காசாவிலும், மியன்மாரிலும் இந்த மனுநீதி பேசும் உலகமும் கண்டன அறிக்கைகான அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையும் என்ன செய்தன? ஒரு துரும்பைக் கூடத் தூக்கிப் போடவில்லை.

அவ்வாறான அரசியல் மயப்படுத்தப்பட்ட பூகோளபிராந்திய பொருளாதார நலன் சார்ந்து சிந்திக்க கூடிய அரசுகளிடம் இருந்து நீதி மறுக்கப்பட்ட சமூகங்களுக்கு உண்மையை பெற்றுக் கொள்ள முடியுமா? வல்லோன் வகுத்ததுதான் பொது நீதி, வலியோன் அதற்குள் அடிமையாக இருக்க வேண்டும் என்பதே எழுதப்படாத உலகத்தினுடைய நீதி பரிபாலனமாக தொன்று தொட்டு மேலெழுந்து நிற்கிறது.

இதுவரை 45க்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் கைப்பற்றி இருக்கிறார்கள். இதில் நான் காயிரம் எலும்புக்கூடுகள் கைப்பற்றினால் கூட இலங்கை அரசிடமிருந்தோ சர்வதேச சமூகத்திடம் இருந்தோ ஒருபோதும் நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாது.

புதைகுழியை தோண்டுகிறோம், விசாரணையை நடத்துகிறோம், வெளிநாட்டுக்கு பரிசோதனைக்காக அனுப்பி இருக்கிறோம், தமிழ் மக்கள் மீது கரிசனை காட்டுகிறோம், உங்களோடு நாங்கள்

தொடர்ச்சி▼



# செம்மணிப் புதைகுழியும் அறமற்ற நீதியும்!

தொடர்ச்சி▲

இருக்கிறோம் என ஆசை வார்த்தைகளை கூறி, இந்த அரசு மேலும் வாக்கை தமிழ் மக்களிடமிருந்து கபளீகரம் செய்து கொள்வதற்கு இந்த செம்மணி அகழ்வின் மறுபக்கம் உதவலாம். அவ்வாறான உதவி வெறுமனே அறிக்கையாகவும், உரையாடலாகவுமே காணாமல் போய்விடும்.

சாதாரண உள்ளூர் விவகாரங்களில் கூட நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியாத விசாரணை குழுக்களால் நேரடியாக இராணுவ சம்பந்தப்பட்டிருக்கும் புதை குழியிலிருந்து இலங்கை போன்ற மனித உரிமைகளை மதிக்காத நாட்டில் அடிப்படை உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டை தெளிவுப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களினுடைய எண்ணங்களுக்குப் பாதகம் ஏற்படுத்தாத வகையில் செயலாற்றக்கூடிய களநிலை உண்டா? ஆயுத முனையில் கூட சாதிக்க முடியாத நாங்கள் ஜனநாயக ரீதியிலே எமது அரசியல் இருப்பை தக்க வைக்க முனைவது எந்த வகையிலும் சாத்தியமற்ற ஒன்று. 16 ஆண்டுகளாகப் போராடுகின்ற காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைத்ததா? இராணுவத்தினரிடமும், பொலிஸாரிடமும், கடற் படையினரிடமும் விமானப்படைனரிடமும் புலனாய்வுத்துறையினரிடமும் நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைத்ததா? முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரனால் தனது கணவரை ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணவில்லை என நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் இன்றைய நிலை என்ன? சாட்சியங்களுடைய காணாமல் ஆக்கப்பட்டுருக்கான நீதி இது வரைக்கும் கிடைத்ததா? மேலே எழுப்பிய கேள்விகளுக்கு பதில் இல்லாதது போல் செம்மணிப் புதைகுழியும் கால நிழ்ச்சியில் கரைந்தே போகும்.

உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக ஒருபோதும் நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாது. சாதாரண விசாரணையாளர் தொடக்கம் அதிகார மையத்தின் உச்சம் வரைக்கும் ஒரு சோடி நீதியோடு இலங்கையில் உலா வருகிறார்கள். தமிழர்களுக்கு ஒன்று, சிங்களவர்களுக்கு இன்னொன்று. இந்த ஒரு சோடி நீதியில் மாற்றம் வராத வரை எத்தனை விழிப்புணர்வுகள் ஏற்படுத்தியும் 70 ஆண்டுகளில் தங்கள் மனோநிலை மாற்றிக் கொள்ளாத சிங்களர்கள் தமிழர்கள் வாழ்வியல் உரிமையையும், இருப்பு உரிமையை நிலப்பரப்பின் ஊடாக அரசத் திணைக்களங்களை வைத்து வடக்கு கிழக்கில் குடியிருக்க விட முடியாமல் தடுக்கின்ற இந்த அரசு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்று நம்புவது முட்டாள்தனத்தின் அதி உச்சம். நீதி,சமத்துவம், சமூக சம நீதி, மனித உரிமை.... இச்சொற்கள் இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, உலகத்தில் எந்த ஆட்சியாளர்களுக்கும் ஏற்றுக் கொள்வதில்லை.

நீதியின் பரிபாலனத்தில் இவ்வுலகத்தின் ஒழுங்கு கட்டமைக்கப்படவில்லை. அநீதியிலும் சூழ்ச்சியிலும் உலகியல் ஒழுங்கு திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமாக பழக்கப்பட்டவர்களை நீதியின் நிழலை உணர்ந்து கொள்ளுங்கள் என முனைவது மிக ஆபத்தானது. பத்தோடு 11ஆக செம்மணியும் அத்தோடு ஒன்று என்பதே இலங்கை அரசின் நிலைப்பாடாகக் காணப்படும்.

இதன் அடுத்த நகர்வை நோக்கி வலிமையாக நகர்வதே பாதிக்கப்பட்ட தரப்பினரும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் எண்ணமாக அமைய வேண்டும். காலம் கனியுமா????

# அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்துக்கான ட்ரம்ப்பின் காலக்கெடுவுக்கு மோடி பணிவார்

## ராகுல் காந்தி கூறுகின்றார்



அமெரிக்கா - இந்தியா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள காலக்கெடுவுக்கு நரேந்திர மோடி பணிவுடன் தலைவணங்குவார் என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையே மிகப் பெரிய அளவில் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒப்பந்தத்தில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் தொடர்பாக தொடர் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு ஜூலை 9 ஆம் திகதியை காலக்கெடுவாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்ணயித்துள்ளதால், அதற்குள் ஒப்பந்தம் இறுதி செய்யப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல், நாட்டின் நலனே முக்கியம் காலக்கெடு அல்ல என தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இரு தரப்பினருக்கும் பயன் அளிக்கக்கூடியதாக, இரு தரப்பினருக்கும் வெற்றியை அளிக்கக்கூடியதாக ஒப்பந்தம் இருந்தால் மட்டுமே அது சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தமாகவும், ஏற்றுக்கொள்ளத்தக்க ஒப்பந்தமாகவும் இருக்கும். எங்களின் தேசிய நலன்தான் எங்களுக்கு மிகவும் முக்கியம். அதை மனதில் கொண்டே எங்கள் முடிவு இருக்கும். வளர்ந்த நாடுகளுடன் அத்தகைய ஒப்பந்தங்களை மேற்கொள்ள இந்தியா எப்போதும் தயாராக உள்ளது.” என்று கூறியிருந்தார்.

பியூஷ் கோயலின் இந்த கருத்தை சுட்டிக்காட்டி, காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“பியூஷ் கோயல் எப்படி வேண்டுமானாலும் மார் தட்டிக் கொள்ளட்டும். நான் சொல்வதை குறித்துவைத்துக் கொள்ளுங்கள். ட்ரம்ப்பின் வரி காலக்கெடுவுக்கு மோடி பணிவுடன் தலைவணங்குவார்.” என்று கூறியுள்ளார்.

# செம்மணியில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் மேலூரில் நாம் தமிழர் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்














யாழ்பாணம், செம்மணி பகுதியில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் மீது ஐ.நா மனித உரிமை ஆணையம் உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நாம் தமிழர் கட்சியின் சார்பில், தமிழர் மக்கள் இயக்கம், தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை மாவட்டம் மேலூர் பஸ் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்து இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு வருகின்ற நிலையில், இது குறித்து அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு முதல் இப்போது உள்ள ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு வரை எந்தவித கண்டன குரல் எழுப்பி, உரிய நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக இருந்து வருகின்றன என குற்றம் சாட்டினர்.

தொடர்ந்து, இலங்கை அரசு மீது ஐ.நா மனித உரிமை ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

சர்வதேச நீதிமன்ற விசாரணை நடத்தி சிங்கள இராணுவ குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசு வழக்கம் போல கள்ள மௌனம்காக்காமல்சர்வதேசவிசாரணை நடத்த குரல் கொடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் தமிழக மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில் இலங்கை அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாம் தமிழர் கட்சி, தமிழர் மக்கள் இயக்கம் மற்றும் தமிழ் தேசிய பேரியக்கம் சார்பில் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் -06.07.2025




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது. நீரை அதிகமாகப் பருகவும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமானபயணம்காணப்படும்.இதுஉங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம்திறந்து பேசதயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினை ஏற்படும் என்பதால் ஆரோக்கியமான உணவை உண்ண வேண்டும். நீரை அதிகமாகப் பருக வேண்டும்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதி நிலையை மேம்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மன தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

முதுகு மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முடியும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.பொறுப்புகள் இருந்து கொண்டே இருப்பதன் காரணமாக வங்கியிருப்பு பராமரிப்பது கடினமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்

# இன்றைய ராசி பலன்கள் -06.07.2025




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். மன வருத்தங்கள் ஏதும் இல்லாமல் இன்று திருப்தியான உணர்வுடன் இருப்பீர்கள்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் நல்ல பலன் கிடைத்து உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.